


காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் உள்ளனர்.

## காஞ்சியில் செப்.15 முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கும்

# கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணிதிரள்வோம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.6- காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் செப்டம்பர் 15 அன்று காலை 10.00 மணியளவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருக்கரங்களால் தொடங்கி வைத்திடும் கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் தொடக்க விழாவிற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஆர்.டி.அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன்,

பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், த.ஜெயகுமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், து.காமராஜ், எஸ்.இந்திரன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க. தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், கே.எத்திராஜ், எம். செல்வகுமார், ம.கணேஷ் பாபு, செ.அருள்தேவி, இரா. பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ் மாறன், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல். பிரபு, என்.கனகராஜ், பா. ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க. பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர். கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில்தேவராஜ், த. விநோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே.சையத் யூசுப், பொன்.ரமேஷ்கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ். கர்ணன், ஜான் தினகரன், உதயா கருணாகரன், சசிகலா, கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு, தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் வருகிற செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் அன்று கழக தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதியை இனிதே நிறைவேற்றி மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கிடும் அற்புத திட்டமான கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா வருகிற செப்டம்பர்15 அன்று காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமான முறையில் நடைபெறவுள்ளது.

இந்த பிரமாண்டமான விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ஆயிரக்கணக்கில் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக முடிவெடுக்கிறது.

2023 தி.மு.க. முப்பெரும் விழா வருகிற 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் வேலூரில் நம்முடைய உயிரினும் மேலான கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்பு அண்ணன் தளபதி அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறுகிறது.

"கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கமும், கழகத்தின் பவள விழா தொடக்கமும் இணைந்த இந்த ஆண்டில், வேலூரில் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவில் பங்கேற்க வாரீர் என்று நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்பு தலைவர் அவர்கள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் மகத்தான வெற்றிக்கு அச்சாரமிடும் வேலூர் முப்பெரும் விழாவுக்கு கொள்கைப் படையாகத் திரண்டு வருக நாற்பதும் நமதே நாடும் நமதே என்ற இலக்கை அடைந்திடச் சூளுரைக்கும் விழாவாக வேலூர் முப்பெரும் விழா அமையட்டும்" என்று அகம் மகிழ்ந்து வரவேற்றுள்ள நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்பு தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பான அழைப்பினை ஏற்று,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக அணிகளின் மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் வேலூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்று சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக முடிவெடுக்கிறது.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த காஞ்சிபுரம் மண்ணில் பிறந்து தனது அடுக்கு மொழி பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் அறிவாற்றலாலும் தமிழக மக்களை கவர்ந்த மாபெரும் அரசியல் தலைவர் நம்மை எல்லாம் ஆளாக்கிய "காஞ்சி தந்த காவியத் தலைவன், "தென்னாட்டு காந்தி, "இந்நாட்டு இங்கர்சால், என்று அனைவராலும் போற்றி புகழப்படும் அரசியல் மாமேதை, எந்நாளும் பொது வாழ்வில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று உறுதியோடு இறுதி நாள் வரை வாழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் இதயங்களில் வாழ்கின்ற காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கெல்லாம்,

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் கிளை வார்டுகளில் உள்ள அனைத்து கழகக் கொடிக் கம்பங்களிலும் கழக கொடியேற்றியும் அதன் அருகே அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தினை அலங்கரித்து வைத்தும், சக்கரை பொங்கல் இனிப்பு வழங்கியும் வழக்கம் போல மிகவும் எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாளாக கடைபிடிக்க வேண்டும் என்றும் அத்துடன் உறுதி மொழியும் ஏற்றிட வேண்டும், நம்முடைய முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்துள்ளபடி, தந்தை பெரியார் 145வது பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் தேதி அன்று காலை 9.00 மணியளவில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் கிளை வார்டுகளில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கும், ஆங்காங்கு தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி சமூக நீதிநாளாக கடைபிடித்து கழகத்தினர் அனைவரும் உறுதி மொழி ஏற்று தந்தை பெரியாருக்கு பெருமை சேர்ப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் அண்ணா பிறந்தநாள் விழா சிறப்பு கருத்தரங்கத்தை, இந்த ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாளை யொட்டி மிகவும் சிறப்பான முறையில் நடத்துவது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

# திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.4 கோடியில் புதிய வெள்ளித் தேர்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - ஆர்.காந்தி வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

திருத்தணி, செப். 6- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, ஆர்.காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் (4.09.2023) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வெள்ளித் திருத்தே ரின் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து, திருக்கோயில் பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழு பரிந்துரை யின்படி வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் முதல் தவணை ரூ.2.35 கோடியினை திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கியதோடு, கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினையும் வழங்கினர்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து வருகின்ற பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி 6 ஆண்டுகளுக்கு முன்பே வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படாமல் இருந்தது. இத்திருக்கோயிலின் மொத்த வருமானத்தில் 20 சதவீதம் மட்டுமே சம்பள செலவின உச்சவரம்பாக அனுமதிக்கப்பட்டிருந்தே அதற்குக் காரணமாகும்.

### பணியாளர்கள் நலன்

இதுகுறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் சம்பள செலவின உச்சவரம்பினை 25 சதவீதமாக உயர்த்தி கடந்த 10.08.2023 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதே போல் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற 48 முதுநிலை திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் ஏற்கனவே வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து இத்திருக்கோயிலின் 204 பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 8.43 கோடியினை மூன்று தவணைகளாக பிரித்து இன்றைய தினம் முதல் தவணையாக ரூ.2.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திருக்கோயிலில் பணிபுரிந்து மரணம் அடைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்கு ஏற்கனவே கருணை அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இன்றைய தினம் ஒரு வாரிசுதாரருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களின் நலன் ஒருபுறம் என்றாலும், திருக்கோயிலில் பணிபுரிகின்ற பணியாளர்களின் நலன்களை பாதுகாக்கின்ற அரசாக இந்த அரசு திகழ்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

திருத்தணி முருகனின் தங்கத்தேர் கடந்த 5 ஆண்டுகளாக ஓடாமல் இருந்தது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் தங்கத்தேரில் மீண்டும் தணிகை முருகன் உலா வந்தார். அதேபோல 12 ஆண்டுகளுக்கு பிறகு இராமேஸ்வரம் தங்கத்தேரும், 10 ஆண்டுகளுக்கு பிறகு சமயபுரம் தங்கத்தேரும் இந்த ஆட்சியில் தான் உலா வந்ததது. மேலும், இத்திருக் கோயிலின் வெள்ளி தேர் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு பழுதுபட்டு உலா வராமலிருந்த நிலையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன் 2022 - 2023 ஆம் ஆண்டு ரூ.4 கோடி மதிப்பீட்டில் 534 கிலோ எடையிலான வெள்ளியை கொண்டு தேர் செய்வதற்கு உத்தரவிடப்பட்டது. இன்றைக்கு அந்த வெள்ளி தேரையும் வீதி உலா வர ஏற்பாடு செய்திருக்கின்றோம். இதுபோல் 150 ஆண்டுகள், 100 ஆண்டுகளுக்கு மேல் ஓடாமல் இருந்த திருத்தேர்களையும் ஓட்டி பெருமை சேர்த்து ஆட்சி இந்த ஆட்சி.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 965 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. 1,000 ஆவது திருக்கோயில் குடமுழுக்கு வருகின்ற 10 ந்தேதி சென்னை, மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் நடைபெறுகின்ற மகிழ்ச்சியான சூழ்நிலையை, ஆன்மிக புரட்சியை இந்த ஆட்சி இன்றைக்கு மேற்கொண்டு இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திருக்கோயிலில் மாஸ்டர் பிளானை பொறுத்தளவில் ஏற்கனவே நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சி பள்ளி, திருமண மண்டபங்கள் கட்டும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதர பெருந்திட்ட வரைவிற்கான பணிகளை ஒருங்கிணைத்து வெகு விரைவில் அரசாணை வெளியிடப்படவுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 15 திருக்கோயில்கள் பெருந்திட்ட வரைவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. திருச்செந்தூர், பெரியபாளையம் மற்றும் சமயபுரம் திருக்கோயில்களுக்கு ஏற்கனவே அரசாணை வழங்கப்பட்டு விட்டது.

### திருப்பணிக்கு நிதியுதவி

இதர திருக்கோயில்களுக்கு இந்தாண்டு இறுதிக்குள் அரசாணை வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும். இந்த ஆட்சி ஏற்பட்டபின் கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணி எண்ணிக்கை தலா 1,000 லிருந்து 1,250 ஆக உயர்த்தியும், நிதியுதவி ஒரு இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தியும் வழங்கப்பட்டு வருகின்றது. 2021-2022, 2022- 2023 ஆண்டுகளில் 2,500 கிராமபுற திருக்கோயில்கள் மற்றும் 2,500 ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு தலா 2 இலட்சம் வீதம் ரூ. 100 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆண்டிற்கு திருப்பணி நிதியுதவி வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எங்களுக்கு பதவி வழங்குவதற்கும், பதவி வேண்டாம் என்று சொல்வதற்கும் முதலமைச்சர் அவர்களுக்குத் தான் அதிகாரம் உண்டு. அண்ணாமலைக்கு எப்படி இந்த அதிகாரம் கிடைத்தது என்று தெரியவில்லை. எங்களைப் பொறுத்தளவில் சனாதனமும் இந்து மதமும் வாழைப்பழத்தைப் போன்றது. வாழைப்பழம் என்பது இந்து மதம் என்றால் சனாதனம் என்பது வாழைப்பழத்தின் தோலாகும். தோலை நீக்கிவிட்டுத் தான் பழத்தை அருந்த வேண்டும் சனாதனத்தின் தேவையில்லாத பகுதிகளை எதிர்ப்பது தான் எங்கள் கொள்கை. சனாதனம் என்று சொல்பவர்களை அழிப்பதும் ஒழிப்பதும் எங்களது கொள்கை அல்ல. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இதனை தெளிவாக எடுத்துரைத்து இந்த சர்ச்சைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

எங்களைப் பொறுத்த அளவில் சனாதன கோட்பாடுகளை தான் நாங்கள் எதிர்கிறோம், சனாதன கோட்பாடுகளை தான் அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று சொல்கிறோமே தவிர சனாதனத்தை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆகவே அண்ணாமலை போன்றவர்கள் என் மண், என் மக்கள் என்ற பாதயாத்திரை சற்றும் எடுபடாமல் போய்விட்டது என்பதற்காக ஏதாவது ஒரு வகையில் திசை திருப்ப வேண்டும் என்பதற்காக இதுபோன்று உதவாத ஆயுதங்களை கையில் எடுத்துக் கொண்டுள்ளார். அவர் கண்ணாடி வீட்டில் இருந்து கல் எறிந்து கொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்ற கழகம் கற்கோட்டையாக இருக்கின்றது. இந்த திராவிட முன்னேற்றக் கழக, திராவிட மாடல் அரசுக்கு எந்தவிதமான சேதாரம் வராது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ. முரளீதரன், திருவள்ளூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் மரு. என்.ஓ. சுகபுத்திரா, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் ச.சந்திரன், அறங்காவலர் குழு தலைவர் சு.ஸ்ரீதரன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி க.தீபா, திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி க.ரமணி, வேலூர் மண்டல இணை ஆணையர் திருமதி விஜயா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தானில் பெட்ரோல் விலை ரூ. 300ஐ தாண்டியது!

இஸ்லாமாபாத்,செப்.6- பாகிஸ்தானில் பெட்ரோல் விலை ரூ.300ஐ தாண்டியதால் பொதுமக்கள் கராச்சி உள்பட நாட்டின் பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்திடம் பாகிஸ்தான் அரசாங்கம் கடன் கேட்டுள்ளது. ஆனால் அதற்கு மானியங்களை தவிர்ப்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்து இருக்கிறது. அதன்படி அங்கு பெட்ரோல், டீசல் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டு வரும் மானியம் குறைக்கப்பட்டு வருகிறது. இதனால் அவற்றின் விலை தாறுமாறாக எகிறி உள்ளது.

இந்தநிலையில் தற்போது பெட்ரோல் லிட்டருக்கு ரூ.14.91 அதிகரித்து ரூ.305.36 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் டீசல் ரூ.18.44 உயர்த்தப்பட்டு ரூ.311.84 ஆக உயர்ந்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் முதன்முறையாக பெட்ரோல் விலை ரூ.300ஐ தாண்டி உள்ளது. இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலையும் உயரும் என்பதால் பொதுமக்கள் வர்த்தக தலைநகரான கராச்சி உள்பட நாட்டின் பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.




திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழு பரிந்துரையின்படி வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் முதல் தவணை ரூ.2.35 கோடியினை திருக்கோயில் பணியாளர்களுக்கு அமைச்சர்கள் ஆர்.காந்தி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் வழங்கினர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ. முரளீதரன், திருவள்ளூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்திரா, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் ச.சந்திரன், அறங்காவலர் குழு தலைவர் சு.ஸ்ரீதரன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திருமதி க.தீபா, திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி க.ரமணி, வேலூர் மண்டல இணை ஆணையர் திருமதி விஜயா மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக வழக்கறிஞர் அணியின் கூட்டம் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி உரையாற்றினர். இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.